# செம்பொருள்: “மன வேதனையில் நம்பிக்கை“

**1. இறைவழிபாட்டிற்கான அழைப்பு:**

என் நெருக்கடிவேளையில்
நான் ஆண்டவரிடம் மன்றாடினேன்
என் கடவுளை நோக்கிக் கதறினேன்;
தமது கோவிலினின்று
அவர் என் குரலைக் கேட்டார்;
என் கதறல் அவர் செவிகளுக்கு எட்டியது.

எளியேன் சிறுமைப்பட்டவன்; காயமுற்றவன்;
கடவுளே! நீர் அருளும் மீட்பு
எனக்குப் பாதுகாப்பாய் இருப்பதாக!
கடவுளின் பெயரை நான் பாடிப் புகழ்வேன்;
அவருக்கு நன்றி செலுத்தி,
அவரை மாட்சிமைப்படுத்துவேன்;

திருப்பாடல்கள் (சங்கீதங்கள்) 18:6 & 69:29-30

**2. வரவேற்பு**: இந்த குணமாக்குதல் திருப்பணி ஓய்வுநாளான இன்று இறை வழிபாட்டிற்கு வந்துள்ள ஒவ்வொருவரையும் நமது ஆண்டவரும் இரட்சகருமான இறை மைந்தன் இயேசுவின் பெயரால் வரவேற்கிறோம். இந்த நாளானது நம்மை உருவாக்கின ஆண்டவர் நம் அனைவருக்கும் கொடுத்துள்ள குணமாக்கும் தன்மையை நினைத்தவர்களாய் அதை இந்த உலகத்திலே இழப்பு சோகம் வலி குழப்பம் மற்றும் மனவேதனை நிறைந்த உலகத்திலே கொண்டாடும்படியாய் சிறப்பாய் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

**3. துவக்க இறைவேண்டல்**: சர்வ வல்லமையுள்ள பிதாவே எம் வாழ்வின் ஆதாரமும் அனுகூலமான துணையுமானவர். எங்களுடைய பெலவீனத்திலே எண்களின் பெலனாய் இறைவா நீர் இருக்கின்றீர் என்ற உண்மையை உணர்த்தியமைக்காக நன்றி செலுத்துகிறோம். எங்களுடைய மெலிந்துபோன ஆத்துமாவை குணப்படுத்துகின்ற உமது பிரசன்னம் எனும் ஆசிர்வாதத்திற்காயும் நன்றி செலுத்துகிறோம். நாங்கள் துன்பத்திலும் பிரச்சனைகளிலும் இருக்கும்போது எங்களின் நொந்துபோன மனமும் வலிமையற்ற உடலும் பெலன் பெற்றுக்கொள்ளும்படியாய் உம்மால் தொடப்படுவதற்கு வேண்டிக்கொள்கிறோம். என்றென்றும் நிலையாய் உள்ள உமது அன்பினாலே எங்களை விட்டு விளக்காமலும் கைவிடாமலும் இருக்க வேண்டிக்கொள்கின்றோம். உமது வாழ்வு தரும் தண்ணீரை தந்து எங்களின் தாகத்தை திர்த்தருளும் மற்றும் எங்களை கைவிடாதிரும். எமது வாழ்வின் ஒவ்வொரு மணித்துளிகளிலும் எம்மை கவனித்து வளமைப்படுத்தி எமது வலிமையற்ற கரங்களின் மூலமாக உமது குணமாக்கும் முழுமையாக்கும் வல்லமையையின் அனுபவத்தை பெற்றுக்கொள்ள உதவும். உம்முடைய உடலின் உறுப்பாக இருக்கின்ற எம்மை ஆசிர்வதித்து எமது வாழ்வின் ஒவ்வொரு சூழலிலும் உம்முடைய தூய புத்துணர்வை பெற்றுக்கொண்டு எமது வாழ்வில் உள்ள எல்லா சவால்களையும் சோதனைகளையும் மேற்கொண்டு எமக்கு எம் வாழ்வின்மீதே ஒரு பிடிப்பு ஏற்படச் செய்யும். இவைகளை இயேசுவின் பெயராலே வேண்டுகிறோம் தூய தந்தையே. ஆமென்.

**4. துவக்கப் பாடல்:**

**5. அப்போஸ்தலர் / நிசேயா விசுவாசப் பிரமாணம் / மூவொரு கடவுளைப் போற்றுதல் / பிழையுணர்ந்து மன்றாடுதல் / பாவ மன்னிப்பின் நிச்சயம்** (பொதுவான ஆராதனை முறைமை)

**6. திருவிவிலியப் பாடங்கள்:**

முதலாவது பாடம்: திருப்பாடல்கள் (சங்கீதங்கள்) 116: 1-19
இரண்டாவது பாடம்: உரோமையர் 8: 18-30
மூன்றாவது பாடம்: மத்தேயு நற்செய்தி 6: 25-34

**7. குணமாக்குதல் திருப்பணியைப் பற்றி ஓர் அறிமுகம்:**

இயேசுவினுடைய குணமாக்குதல் திருப்பணியானது அவருடைய மனதுருக்கத்துடன் கூடிய கவனிப்பின் அடிப்படையில் அமைந்தது. இயேசுவானவர் ஒவ்வொரு தனிமனிதனும் அபரிதமான வாழ்வினைப் பெறும்படியாய் விரும்பினார். அவருடைய குணமாக்குதல் ஒவ்வொருவருடைய ஆவி, மனம், உடல், உணர்வு மற்றும் சமூக உணர்வு சார்ந்த பல்வேறு கோணங்களில் செயல்படுவதாய் இருந்தது. ஒவ்வொரு குணப்படுத்துதலின் ஆரம்ப முதல் முடிவு வரையிலான அடிப்படையான ஊற்றே நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே. நமது இந்திய தேசத்திலே குணப்படுத்துதல் திருப்பணியானது Medical Missionary Association (MMA) என்ற அருட்பணி குழுவினரால் 1905ம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. இந்த இயக்கமானது 1926ம் ஆண்டு Christian Medical Association of India (CMAI) ஆக பெயர் மாற்றம் பெற்றது. இப்பொழுது CMAIல் ஏறக்குறைய 300 கிறிஸ்தவ அருட்பணி மருத்துவமனைகள் அங்கத்தினர்களாக இருக்கின்றன. இந்த நிறுவனத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வேலூர் மற்றும் லூதியான கிறிஸ்தவ மருத்துவ கல்லூரிகளும் அடங்கும். இந்த நிறுவனமானது குணமாக்கும் திருப்பணியில் 10000க்கும் அதிகமான கிறிஸ்தவ சுகாதார துறை வல்லுனர்களை ஒருங்கிணைத்து பல்வேறு மருத்துவ பணிகளை நிறைவேற்றி வருகின்றது. இந்த நிறுவனமானது நமது தேசத்தின் பல்வேறு மருத்துவ தேவைகளை நிறைவேற்றுவதன் மூலமாக ஒரு முக்கியமான இயக்கமாக வலுப்பெற்றுள்ளது. பல முக்கியமான மருத்துவ துறைகளில் சிறப்பாக தொழுநோய், காச நோய், மற்றும் HIV/AIDS போன்ற துறைகளில் CMAI அங்கத்தினர்கள் முன்னனி ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். CMAIன் நோக்கமானது குணமாக்குதல் திருப்பணி மூலமாக இந்திய திருச்சபைகள் இயேசுவின் அன்பு மற்றும் அவரது கட்டளைக்கு ஏற்ப ஒரு நியாயமான ஆரோக்கியமான சமூகம் உருவாவதற்கு உதவுவதே ஆகும்.

**8. அருளுரை:** **கருப்பொருள்: "மன வேதனையில் நம்பிக்கை"**

*26 வானத்துப் பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா!*
*27 கவலைப் படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்ட முடியும்?*

*மத்தேயு 6:26-27*

**முகவுரை:**

வாழ்வில் மனவேதனை என்பது ஏன்? ஏனென்றால் நாம் கவலைப்படுகிறவர்களாக பேராசை உள்ளவர்களாக இருப்பதாலேயா? அல்லது இப்படித்தான் இறைவன் எம்மை படைத்துள்ளாரா? நாம் விழுந்து போனவர்களாக ஒரு சபிக்கப்பட்ட உலகிலே வாழ்பவர்களாக இருக்கின்றோம். ஆம், நாமெல்லாரும் பகுத்தறிவு நிறைந்த அதே நேரத்தில் மனம் உடல் ஆன்மா என்ற மூன்று நிலைகளிலும் துன்பத்தை உணர்பவர்களாகவும் இருக்கின்றோம். இங்கிருந்துதான் நம்முடைய மனவேதனை ஆரம்பமாகின்றது. எங்கு இந்த துன்பம் முடிவடைய வேண்டுமென்றால் நம்முடைய நம்பிக்கையில் அதாவது இயேசுவோடு நமக்கு உள்ள உறவில் முடியவேண்டும்.

அடிப்படையிலே மனவேதனையானது இயேசுவின் மீது நமது சார்ந்திருத்தலையும், எல்லா நேரங்களிலும் அவரையே நம்பிருக்கும்படியாய் இறைவன் பக்கமாய் நம்மை இழுப்பதாய் இருக்க வேண்டும்.

மனவேதனையும் விரக்தியும்:

- இந்த உலகத்திலே எல்லா வகையான உயிரும் நிலையற்றதே.
- வாழ்தலும் மற்றும் கவலைப்படுதலும்
- மிக உயரங்களை நோக்கி குறிவைத்தல்
- துன்பத்தில் இழப்பும் அதை சமாளிக்கும் திறமையும்
- மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாமையும் புதிய நம்பிக்கை இல்லாமலும் இருப்பது

மனசோர்வும் தோல்வியும்:

- தொடரும் தோல்விகளினால் மனசோர்வு
- பொய்த்தோற்றங்களை துரத்துவதினால் வரும் மனசோர்வு
- சாதிக்கவோ வெற்றிகொள்ளவோ இயலாமை
- கடமைக்காக வாழுதல்
- எதிர்மறையான விளைவுகளை சேகரித்தல்
- வாழ்வின் மீதான பிடிப்பையும் நம்பிக்கையையும் இழத்தல்

**கிறிஸ்துவின் மீது சார்ந்திருத்தலே நம்பிக்கையை கொடுக்கும்:**

- புது அர்த்தத்தையும் வறைமுறையையும் வாழ்விற்கு தருகின்றது.
- வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்ந்தபின் நம்பிக்கையில்லாத நமது வாழ்வின் சூழல்கள்கூட வித்யாசமாக தென்படக்கூடும்.
- வாழ்வைப் பற்றியதான பார்வை மாறும் போது புதிய பார்வையும் வழியும் ஆற்றலும் வலிமையும் உண்டாகும்.
- வாழ்வில் சரியானவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.
- வாழ்வின் எல்லைகளையும் சாத்தியக்கூறுகளையும் புரிந்துகொள்ளமுடியும்.
- எல்லைகள் விரிவடைந்து மேலான வழிகளை நாடுவோம்
- எந்த இழப்புமே தோல்வியல்ல என்ற உண்மையை உணரமுடியும்.

**நிறைவாக:**

கிறிஸ்துவின் மீதான நம்பிக்கை நம்மை தோற்கடிக்க முடியாத தனிமனிதர்களாக இயேசுவின் பிள்ளைகளாக மாற்றுகின்றது. எந்த சூழலிலும் நம்பிக்கை கொடுக்கக்கூடிய மற்றும் வாழ்வதற்கான ஆற்றலை நாம் கடவுளிடம் இருந்தே பெற்றுக்கொள்கிறோம். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டிருப்பதால் நாம் தோற்கடிக்கபடாதவர்களாக எந்த சக்தியும் வெற்றிகொள்ளமுடியாதவர்களாக மாற்றப்படுகின்றோம். வானத்தில் சுதந்தரமாய் இருக்கும் பறவைகளைப் போல நமது வாழ்வானது சுதந்தரமானதாக அமைதியானதாக ஒரு நிறை வாழ்வாக அனுபவிக்களாம். உண்மையான கடவுளான இயேசு கிறிஸ்துவை நமது இரட்சகராக கொண்டிருப்பது நமது பாக்கியமே. இந்த கடவுளுடைய அன்பை நமது வாழ்வானது பிரதிபலிக்கவேண்டும்.

**இறைவேண்டல்:**

வானகத்தில் இருக்கின்ற எங்கள் தந்தையே எங்களுக்காக எங்களைப் போலவே வேதனைகளுக்குள்ளாய் கடந்து வந்த இறைமகன் இயேசுவிற்காய் நன்றி செலுத்துகிறோம். இந்த உலகத்தில் மனவேதனையில் உள்ள உம்முடைய மக்களுக்காக உம்மை நோக்கி கூப்பிடுகின்ற உம்முடைய மக்களுக்காக நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம். இந்த உலகத்திலே மனவேதனைகளால் சூழல்களை தாங்க முடியாமல் துன்படுகின்ற அனைவருக்கும் கிருபைகூர்ந்து உதவுமாறு வேண்டிக்கொள்கின்றோம். இவையனைத்தையும் நாங்கள் இயேசுவின் நாமத்தினால் வேண்டிக்கொள்கின்றோம்.

**9. பொதுவான இறைவேண்டல்கள்:**

எம்மை நேசிக்கின்ற பரம தந்தையே எமது வாழ்வின் எல்லா சூழல்களையும் மேற்கொள்ளகூடிய வழிகளை தந்தற்காய் நன்றி செலுத்துகிறோம். எத்தகைய சூழலும் உமது ஆற்றலுக்கு மிஞ்சியதல்ல என்ற நம்பிக்கையை கொடுத்ததற்கு நன்றி செலுத்துக்றோம். இவ்வுலக வாழ்வில் கடுமையான சூழல்களின் மத்தியில் கடந்து செல்கின்ற மக்களுக்கு உதவி புரியும். அவர்களை பாதுகாக்க உதவி புரியும். அவர்களை பண்படுத்தி வளர்ப்பிக்க உதவி செய்யும். அவர்களை தாங்கி கவனித்துக்கொள்ளபவர்களுக்கு உதவி செய்யும்

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இரக்கமுள்ள இறைவனே பரம தந்தையே வாழ்வில் மனவேதனையில் உள்ளவர்கிளடையே ஊழியம் செய்கின்ற ஊழியங்களை தாங்குகின்ற உம்முடைய தாசர்களுக்காக வேண்டிக்கொள்கிறோம். வாழ்வில் கடுமையான சூழல்களால் துன்படுகின்ற மக்களின் வாழ்வை கட்டுகின்ற பணியிலே அவர்களை குணப்படுத்துகின்ற வழிகளிலே நடத்துகின்ற ஊழியர்களுக்காக வேண்டிக்கொள்கிறோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இறைவா உமது மக்களின் நல்வாழ்விற்கு குணப்படுவதற்கு பல்வேறு நிலைகளிலே உதவுகின்ற தாங்குகின்ற குழுக்களுக்காக தனி மனிதர்களுக்காக நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். பிணியாளர்களை கவனித்துக்கொள்கின்ற மருத்துவ பணியாளர்களுக்காக நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம். மனவேதனையுடன் இருக்கின்றவர்களின் நோய் அறிகுறிகளை கண்டுகொள்கின்ற திறமையை ஞானத்தை மருத்துவ பணியாளர்களுக்கு கொடுத்தருளி தாங்க வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

எல்லாம் வல்ல இறைவனை CMAIன் அனைத்து அங்கத்தினர்களுக்காகவும் உறுப்பினர் மருத்துவமனனைகளுக்காகவும் அவர்கள் இந்த தேசம் முழுவதுமாய் நோயுற்றோற்கு துன்படுகின்றவர்களுக்கு மனவேதனையில் உள்ளவர்களோடு

இறைமகன் இயேசுவின் அன்பை பகிர்நதுகொள்கின்றவர்களுக்காக வேண்டிக்கொள்கின்றோம். இந்த குணமாக்கும் திருப்பணியில் உண்மையாய் திறமையாய் செயல்பட முயற்சிக்கின்ற அனைவருக்கும் உதவும்படியாய் வேண்டிக்கொள்கின்றோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இறைவனே மக்கள் அபரிதமான முழுமையான வாழ்க்கை வாழ்வதற்கு இடைஞ்சலாய் உள்ள பிரச்சனைகளை கண்டுபிடித்து களைய முயற்சிப்பதன் மூலமாக CMAI யானது இந்திய திருச்சபையின் மருத்துவ கரமாக சிறப்பாக செயல்பட வேண்டிக்கொள்கிறோம். இந்திய திருச்சபையையும் CMAIயும் ஒன்றாய் இணைந்து உம்முடைய குணமாக்குதலை தேவையான மக்கள் தங்களது அனைத்து நிலைகளிலும் பெற்றுக்கொள்ள உழைக்க நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம்.

**கடவுளே உம்முடைய இரக்கத்தினாலே எங்கள் வேண்டுதலை கேட்டருளும்**

இப்பொழுது ஆராதனை நடத்துபவர் மற்ற வேண்டுதல்களை ஏறெடுத்து பொது வேண்டுதலோடு முடிக்கலாம்)

**பாடல் (காணிக்கை)**

(திருவிருந்து ஆசரிக்கப்படுமானால் தயவுகூர்ந்து அப்பம் பிட்குதல் பகுதியை தொடருமாறும் ஆராதனையை முடிவு ஜெபத்தோடும் ஆசீர்வாதத்தோடும் முடிக்கவும்)

குணப்படுத்தும் திருப்பணி ஓய்வுநாளில் சேகரிக்கப்பட்ட
காணிக்கையானது கீழ் கண்ட முகவரிக்கு
வங்கி வரையோலை மூலமாக அனுப்பப்படலாம்:
Christian Medical Association of India
Plot No. 2, A-3 Local Shopping Centre, Janakpuri,
New Delhi 110058